# Smart
## INSPIRER
## 2022 - 2023

எண்ணங்கள்
மனநல ஆராய்ச்சி & பயிற்சி நிறுவனம்

ஐ நெட்

&

திறன்மிகு பட்டாம் பூச்சிகள்
கற்றல் திறன் பயிற்சி & ஆராய்ச்சி மையம்

The mediocre teacher tells.
The good teacher explains.
The superior teacher demonstrates.
The great teacher inspires.



சித்திரைச்செல்வன்.ம

விதியே வாழ்வென வீதியில் சுற்றி திரிந்து ...
பார்த்ததும், கேட்டதுமான நிழல்களையெலாம்
நிஜமென நம்பி, வெம்பி, நினைத்து !?..
வர்ணஜாலமே வாழ்வின் பொருளென
ஏங்கி ஏங்கி வீதியில் தொலைந்த எமை...
விண்மீன் பிடித்து வானில் வட்டமிட
விமானம் செய்ய கற்றுத் தந்தவரே !..

வகுப்பறை கனவுகளுக்கு நினைவுகளையும் ...
வாழ்வின் காயங்களுக்கு மகத்துவத்தையும் ...
இச்சமுகத்தின் சாக்கடை மனிதனாய் மாறாமல்
சரித்திரம் படைக்கும் சாதனை மனிதனாய்
கருசெய்து எமை உருசெய்த மறுதாயே...

எமைச் சுற்றி உள்ளோரெலாம்
எச்சமிச்சமாய் எமை தூக்கி எறிந்த போதிலும்...
உச்சமிச்சமாய் இவ்வுலகம் எமை மெச்ச
கல்வி விஞ்ஞான ஞானம் தந்து இருளகற்றினீர்.

எம் வாழ்வின் வெளிச்சம்
மின்மினியின் வெளிச்சமாய் இல்லாமல்...
சூரிய கதிரின் வெப்ப வெளிச்சமாய் மாற்றிய
எம் ஆசிரியரே உம் பாதம் பணிந்து
எம் சிரம் தாழ்ந்து உமை வணங்குகிறோம்...

மனநல திறனர் மு.விஜயகுமார்